Minority

12.10.1998

S/No:5

சுருக்கம்

பள்ளிக் கல்வி – சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மைத் தகுதி அளித்தல் – சிறுபான்மைத் தகுதி அளிப்பதற்கான திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எக்ஸ்2)த் துறை

அரசாணை (நிலை) எண்.375 நாள் 12.10.1998

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.648, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பதுறை, நாள் 3.8.1994

2) அரசாணை (நிலை) எண்.371, கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, நாள் 10.5.95

3) அரசாணை (நிலை) எண்.270, உயர் கல்வித் துறை, நாள் 17.6.98.

-------

ஆணை:

மேலே 1ல் படிக்கப்பட்ட ஆணையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறு 30(1) அல்லது கூறு 26ன்படியும், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில்; கல்வி நிறுவனங்களை சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனம் என முடிவு செய்ய அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் முதலிய கல்வி நிறுவனங்கள் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் என்ற தகுதிநிலை (அந்தஸ்து) அளிக்க வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மேலும் இவ்வாணையைத் திருத்தம் செய்து இவ்வழிகாட்டு நெறிமுறைகள் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மட்டும் பொருந்துமாறு ஆணைகள் வெளியிடப்பட்டன. எனினும், இவ்வழிகாட்டு நெறிமுறைகளினால் தங்களது நலன் பாதிக்கப்படுவதாகக் கருதி இவைகளை நீக்க வேண்டுமென்று (cancel) பல்வேறு சிறுபான்மைக் கல்வி நிறுவன அமைப்புகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்தன.

2. சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்துவரும் நிலையில், சிறுபான்மைத் தகுதி கோரி உயர்கல்வித் துறைக்கு வந்த விண்ணங்கள் குறித்து சிறுபான்மைத் தகுதிநிலை வழங்குவது தொடர்பாக மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் வழிகாட்டு நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. 17.6.98ல் வெளியிடப்பட்டுள்ள உயர்கல்வித் துறை அரசாணையில் அரசு ஆணை (நிலை) எண்.371, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நாள் 10.5.95 மற்றும் அரசாணை (நிலை) எண்.567, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள் 15.7.95 ஆகியனத் திரும்பப் பெறப்பட்டுவிட்டதால், அவைகளில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் செயலற்றதாக ஆகி விடுகிறது என்று அரசு ஆணையிடுகிறது.

4. பள்ளிக் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ்வரும் அரசு உதவிபெறும் மற்றும் அரசு உதவிபெறாத சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களிடமிருந்து சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் என்று அறிவிக்கக்கோரி வந்துள்ள முறையீட்டு விண்ணப்பங்களை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பள்ளிக் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு நிதியுதவி பெறும் மற்றும் நிதியுதவி பெறாத சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களை சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் என்று அறிவிக்க, கீழ்க்கண்ட திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அறிவிக்க வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

1. கல்வி நிறுவனங்களின் நோக்கம் சம்பந்தப்பட்ட சிறுபான்மையினரின் நலனை மேம்படுத்துவதற்கானதாக இருக்க வேண்டும் அது சம்பந்தப்பட்ட சிறுபான்மை இனத்தவரின் நலனுக்கு பயனளிக்கத்தக்கதாக இருக்க வேண்டும்.

2. அத்தகைய கல்வி நிறுவனங்கள், சிறுபான்மையினரால் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அவை அந்த சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் மட்டுமே தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. சிறுபான்மை வகுப்பு இனத்தவரால் நிறுவப்படாத ஒரு கல்வி நிறுவனம் சிறுபான்மையினர்த் தகுதி நிலையை (Minority status) அல்லது தன்மையை எந்தச் சூழ்நிலையிலும் பெற இயலாது.

4. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அமைப்புப் பொறுப்பாளர்கள் அல்லது உறுப்பினர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக மட்டமே இருக்க வேண்டும்.

5. சமயம் அல்லது மொழியின் அடிப்படையில் விண்ணப்பதாரர் ஒருவர் சிறுபான்மையினரா இல்லையா என்பதை முடிவு செய்ய, தமிழ்நாட்டில் அந்த சிறுபான்மையினரின் மொத்த மக்கட் தொகையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படுமேயன்றி அந்த கல்வி நிலையம் அமைந்துள்ள குறிப்பிட்ட அந்த பகுதியிலுள்ள சிறுபான்மையினரின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு பரிசீலிக்கக் கூடாது.

6. தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்தவரையில் தமிழ் அல்லாத வேறு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள எவரும் மொழிவாரி சிறுபான்மையினராகக் கருதப்படுவர். சமயவாரி சிறுபான்மையைப் பொறுத்தவரையில் இந்துமதம் அல்லாத வேறு எந்த மதத்தைச் சார்ந்த எவரும் மாநிலத்தில் சமயவாரி சிறுபான்மையினராகக் கருதப்படுவர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். ஏ. கௌரி சங்கர்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை - 6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி (மற்றும்) பயிற்சி இயக்குநர், சென்னை - 6
உறுப்பினர், செயலர் மாநில சிறுபான்மையினர்க் குழு, தேனாம்பேட்டை, சென்னை - 18

நகல்
செயலர், உயர்க் கல்வித் துறை, சென்னை - 9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9
கல்வி அமைச்சரின் அலுவலகம், சென்னை - 9
சட்ட அமைச்சரின் அலுவலகம், சென்னை - 9
செய்தி மற்றும் விளம்பரத் துறை, சென்னை - 9
பள்ளிக் கல்வித் (அனைத்துப் பிரிவுகள்) துறை, சென்னை - 9

/உத்திரவின்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்